# 5

# கெத்செமனே

## மத்தேயு 26:36–46; மாற்கு 14:32–42; லூக்கா 22:39–46; யோவான் 18:1

*"அப்பொழுது இயேசு ... கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்து ..." (மத்தேயு 26:36).*

இயேசு சிலுவைக்குச் செல்லும் முன்பு, அவர் நமக்காக (தம்மையே) ஒப்புக்கொடுக்கும் பலியைப் பற்றி ஜெபிப்பதற்காக எருசலேமுக்கு அருகில் இருந்த கெத்செமனே என்ற தோட்டத்திற்குச் சென்றார். "கெத்செமனே" என்பது "எண்ணெய் பிழியுமிடம்" என்று அர்த்தப்படுகிறது. எருசலேமில் இருந்து ஒலிவ மலைக்கு செல்லும் வழியில் கெதரோன் என்ற ஆற்றைக் கடந்து சென்றால் அங்கிருக்கும் இந்தத் தோட்டமானது, இயேசு எருச லேமில் இருந்த வேளையில் அவரது ஜெப அறையாக இருந்தது (யோவான் 18:1, 2). அவர் அங்கிருக்கையில் நடந்த வரலாறானது மனக்கிளர்ச்சி மிகுந்த, மதிப்புமிக்க, ஆழ்ந்தறிவான, மற்றும் விலைமதிப்பற்ற வேளையாக உள்ளது!

*ஒரு ஜெபத்தின் வேளை!* அது ஒரு நீண்ட இரவாகப் போவதாக இருந்தது, மற்றும் வெள்ளிக்கிழமையானது பெருந்துன்பத்தின் நீண்ட நாளாகப் போவதாக இருந்தது. அவர் எட்டு அப்போஸ்தலர்களைத் தோட்டத்தின் வாயில் அருகே விட்டுவிட்டு, பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரைத் தோட்டத்தின் உட்பகுதிக்கு அழைத்துச் சென்றார். இம்மூவரையும் அவர் "விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்று கட்டளை இட்டுவிட்டு, அவர் தனித்துச் சென்றார் (மத்தேயு 26:41; மாற்கு 14:38).

தமது "வேளை" வந்திருந்தது என்பதை இயேசு முற்றிலும் அறிந்திருந் தார். "பாத்திரம்" என்பது இந்த வேளையைக் குறிக்க அவர் பயன்படுத்திய ஒப்புவமைச் சொல்லாக இருந்தது (மத்தேயு 26:39; மாற்கு 14:36; லூக்கா 22:42ஐக் காணவும்). இந்த "பாத்திரம்" என்பது என்னவாக இருந்தது? தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையில் நித்தியம் யாவற்றிற்குமான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. வெற்றியாளர் எல்லாவற்றையும் எடுத்துக் கொள்வார். மனிதகுலம் இடுக்கண் நிலையில் இருந்தது. சாத்தானையும், பாவம், மரணம், மற்றும் நரகம் ஆகியவற்றையும் வெற்றி கொள்வதற்காக இயேசு போராடினார் ... தனியாகப் போராடினார்! சிலுவையில் அவர், "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று

*கதறுவார் (மத்தேயு 27:46; மாற்கு 15:34). (1) அவர் தேவன் வெறுக்கிற விஷயமான - பாவமாக - ஆக்கப்படுவார். (2) தேவனுடைய நித்திய கோபம் அவர்மீது ஊற்றப்பட இருந்தது. (3) நித்தியம் முழுவதிலும் ஒரே ஒரு வேளை மாத்திரம், பிதாவாகிய தேவனும், குமாரனாகிய கிறிஸ்துவும் பிரிக்கப்பட்டு இருப்பார்கள். பயங்கரங்களின் பயங்கரம்! இருந்தபோதிலும், மனிதகுலத்தை மீட்பதற்கான இந்த ஏற்பாட்டிலிருந்து வெளியேற இயேசு விரும்பவில்லை. அவர் தமது மனிதத்துவத்தில் ஒருக்காலும் முரட்டுத்தனமா யிருந்ததில்லை.*

*இயேசு தாம் விரைவில் காட்டிக் கொடுக்கப்பட இருந்ததுபற்றி ஏற்கனவே தீர்க்கதரிசனம் கூறியிருந்தார். அவர் எவ்வளவாக ஏமாற்றத்திற்கு உட்பட்டு, புண்படுத்தப்பட்டு, மற்றும் புறக்கணிக்கப்பட்டு இருக்க வேண்டும்! அவரை யூதாஸ் காட்டிக்கொடுப்பான்; அவரைப் பேதுரு மறுதலிப்பார். பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் (யோவான்) ஒருவர் மாத்திரமே சிலுவை வரையிலும் கூட இருப்பார். தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களான இஸ்ரவேலர், ஒரு சாதாரணக் குற்றவாளிக்கு (பரபாஸ்) ஆதரவாக நின்று அவரைப் புறக்கணிப்பார்கள்.*

*ஜெபம் என்பதே கிறிஸ்துவின் மிகவும் ஆதிக்கமான ஊழியமாக இருந்தது. இயேசுவுக்கு ஜெபம் தேவையாயிருந்தது என்றால், நமக்கு அது எவ்வளவு அதிகமாகத் தேவைப்பட வேண்டும்? அவர் தம்முடன் விழித்திருக்கும்படி பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும் அழைத்தார் - ஆனால் அவர்கள் உறங்கிவிட்டனர். அவர் முழங்காற்படியிட்டார், பின்பு முகங்குப்புறக் கீழே விழுந்தார். அவர் ஜெபிக்கையில், தேவனிடத்தில் தமது வேண்டுகோளில் அதிகம் அதிகமாக வலிவுள்ளவரானார்.*

*ஒவ்வொரு விருப்பத்தையும் தேவன் நிறைவேற்றுவார் என்பதற்கு ஜெப மானது உத்தரவாதமாக இருப்பதில்லை. நமது ஜெபங்கள் எப்போதுமே தேவனுடைய சித்தத்தின் கீழ் இருக்கின்றன. தேவன் சாத்தியமற்றவை களுக்குத் தேவனாயிருக்கிறார் என்பதை அவருக்கு இயேசு நினைவூட்டி னார்!*

*நித்தியமான முடிவுகள் ஜெபத்தில் மாத்திரமே ஏற்படுத்தப்பட முடியும். எந்த ஒரு விஷயத்தையும் ஜெபம் தீர்த்து வைக்கும் வரையிலும் வேறு எதினாலும் அதைத் தீர்த்து வைக்க இயலாது. தேவனால் கேட்கப் பட்ட பலிக்கு இயேசு தமது இருதயத்தை இணங்கச் செய்வதற்காக ஜெபத்தில் அவர் போராட வேண்டியிருந்தது. அவர் ஜெபித்த ஜெபமானது ஜெபிக்கப்பட்டவற்றிலேயே மிகவும் கடினமான ஜெபமாகும். இது கிறிஸ்துவின் வாழ்வில், "பரிசுத்தங்களின் பரிசுத்தமாக"/"மகாப்பரிசுத்தமாக" இருந்தது. இந்த ஜெபங்களின் மூலமாகவே அவரது நிறைவுப் போதனைகள் தரப்பட்டன.*

*இயேசுவின் ஜெபத்திற்குத் தேவன் உடனடியாகப் பதில் அளித்தார். அவரைப் பெலப்படுத்த ஒரு தூதன் வந்தார் (லூக்கா 22:43). ஒரு தூதனா? ஒருவரா? வெறுமையான கல்லறையின் அருகில் இருந்த மகதலேனா மரியாளிடத்திற்கும் மற்ற பெண்களிடத்திற்கும் தேவன் இரண்டு தூதர்களை அனுப்பினார் (லூக்கா 24:1-10; யோவான் 20:11, 12). இயேசு பன்னிரெண்டு லேகியோன்களுக்கும் அதிகமான*

தூதர்களை அழைத்திருக்க முடியும் (மத்தேயு 26:53), ஆனால் அவர் ஒருவரை மாத்திரமே பெற்றுக் கொண்டாரா? இயற்கைக்கு மாறான அற்புதம் ஒன்று, மனிதப் பொறுப்புக்குப் பதிலியாக இருக்க முடியாது. "… ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது" (மத்தேயு 26:41) என்பதை இயேசுவைக் காட்டிலும் சிறப்பாக வேறு எந்த மனிதரும் அறிவதில்லை (மத்தேயு 26:41; மாற்கு 14:38). பாவம் நிறைந்த மனிதன், மனிதத்துவத்தில் மாத்திரமே இரட்சிக்கப்பட முடியும். மனிதர் என்ற வகையில் இயேசு, எந்த மனிதராலும் செய்ய இயலாததைச் செய்தார்: "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தி யினிமித்தம் கேட்கப்பட்டு" (எபிரெயர் 5:7).

சிலுவைகூட கெத்செமனேயின் அளவுக்குப் பெருந்துக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. தேவனை "அப்பா" ("அப்பா" என்பதற்குச் சமமான அரமாயிக் வார்த்தை) என்று அழைத்ததாக வேதவசனங்கள் யாவற்றிலும் காணப்படும் ஒரே இடம் அந்தத் தோட்டம்தான் (மாற்கு 14:36). கெத் செமனேயில் இயேசு ஒளிந்து கொள்ளவில்லை, ஓடவில்லை, அல்லது சண்டையிடவும் இல்லை … அவர் ஜெபித்தார்.

*முடிவெடுத்தலின் வேளை!* விமர்சகர்கள், இயேசுவின் பகுதியில் தைரியக்குறைவு - ஒருவேளை கோழைத்தனம்கூட - இருந்ததென்று கருத்துத் தெரிவிக்கின்றனர். இது இயேசுவின் தன்மை எல்லாவற்றிற்கும் நேர்மாறானதாக இருந்திருக்கும்! இயேசு ஒரு கோழையல்ல. அவர் மரணத்திற்கோ, வேதனைக்கோ, அல்லது சிலுவைக்கோ பயப்படவில்லை. அவர் தேவனிடத்தில் சிலுவையைக் கலைத்துப் போட்டுவிடும்படி கேட்க வில்லை. இந்த சிலுவை தேவனுடைய நித்திய நோக்கமாயிருந்தது. அவர் தேவனுடைய தெய்வீக குமாரன் என்ற வகையில், நமது பாவங்களுக்கான நிறைவான பலியாக மனப்பூர்வமாய் சம்மதித்திருந்தார்; இருப்பினும், ஒரு மனிதர் என்ற வகையில், அவர் இன்னொரு வழி இராதா என்று ஏங்கினார். இது சிலுவையினுடைய ரகசியத்தின் ஒரு பகுதியாக உள்ளது.

தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவதற்கான இயேசுவின் யுத்தம், அவர் கொல்கொதா சென்று சேர்வதற்கு முன்னதாகவே கெத்செமனேயில் வெற்றிகொள்ளப்பட்டது.[1] இந்தத் தோட்டத்தில் தேவன் இல்லையென்று சொன்னார், இயேசு ஆம் என்று சொன்னார். பாவத்திற்குத் தகுதியான தெய்வீக நியாயத்தீர்ப்பையும் தண்டனையையும் இயேசு ஏற்றுக்கொண் டார். "முடிந்தது!" என்று சிலுவையின் மீது (தான்) கூறப்பட்டது, ஆனால் தேவனுடைய திட்டத்திற்குக் கீழ்ப்படிவதற்கான அவரது முடிவு கெத்செம னேயில் ஏற்படுத்தப்பட்டது/மேற்கொள்ளப்பட்டது. இயேசு தமது ஆத்துமாவை தோட்டத்திலும், தமது சரீரத்தைச் சிலுவையிலும் ஒப்புக் கொடுத்தார்.

பந்தயங்களில் ஆயத்தப்படுதல், முடிவெடுத்தல், மற்றும் ஒப்புக் கொடுத்தல் ஆகியவற்றினால் விளையாட்டில் வெற்றி பெறப்படுகிறது. இயேசு கெத்செமனேயில் யுத்தத்தை வெற்றி கொண்டார். *சிலுவைக்கு*

*முன்னதாகவே பெரிய முடிவை மேற்கொள்ளுங்கள். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று முடிவெடுப்பதற்குச் சிலுவையின்மீது நீங்கள் தொங்கப்போகும் வேளை வரையில் காத்திருக்காதீர்கள்.*

*வேதனையின் வேளை!* கல்வாரியில் இருந்ததைக்காட்டிலும் கெத்செமனேயில் அதிகமான வேதனை இருந்திருக்க வேண்டும். அப்போது இயேசு அனுபவித்த துன்பத்தை எந்த மனிதரும் எந்தக்காலத்திலும் அனுபவித்ததில்லை. சிலுவையின்மீது அவரது பாடுகளைக்காட்டிலும், கெத்செமனேயில் அவரது பாடுகளைப்பற்றி வேதவசனங்கள் அதிகம் கூறுகின்றன.

கடுமையான அச்சுறுத்தலின்கீழ், "அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது" (லூக்கா 22:44). அவர் மரணத்திற்கேதுவான பெருந்துன்பத்தில் இருந்தார். அவரது வியர்வை இரத்தம் போன்று சொட்டியது. இப்படிப்பட்ட நிகழ்வானது அரிதான கோட்பாடாக உள்ளது (இது ஹெமட்டிடிரெளஸஸ் அல்லது ஹெமோஹி டிரெளஸஸ் என்று அழைக்கப்படுகிறது). இவ்வாறு அவர் ஒரு முறையல்ல, ஆனால் மும்முறை ஜெபித்தார்! அவர், "இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கடவது" என்று ஜெபித்தார். அவரை விமர்சித்தவர்கள் சரியாகவே கூறினார்கள்: "மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை!" (மத்தேயு 27:42; மாற்கு 15:31; லூக்கா 23:35ஐக் காணவும்). தேவன், இயேசுவின் ஜெபத்திற்குப் பதில் அளித்தார்! அவர் இயேசுவைக் காப்பாற்றவில்லை, ஆனால் அவர் நம்மை இரட்சித்தார்! இயேசு தம்மையே இரட்சித்துக்கொள்ளக் கூடாதிருந்தும், அவர் இன்னமும் நமது இரட்சகராக இருக்கிறார். *சிலுவை தவிர வேறு வழி எதுவும் இல்லாதிருந்தது!*

தேவனால் கைவிடப்பட்ட இந்தக் குமாரன் கிறிஸ்தவ விசுவாசத்தின் மையப்பொருளாக இருக்கிறார்! சிலுவையின்மீது இயேசு அனுபவித்த உடல்ரீதியான வேதனையைக் குறைத்து மதிப்பிட வேண்டாம். அது பயங்கரமானதாக இருந்தது! இருப்பினும், வேதாகமம் அவர் அனுபவித்த வேதனைபற்றிக் குறைவாகவே குறிப்பிடுகிறது. சிலுவையில் இயேசு ''இரத்த வியர்வை'' வியர்க்கவில்லை. கெத்செமனேயில்தான் அவருக்கு அது நேர்ந்தது. அவரைப் பெலப்படுத்தத் தேவன் ஒரு தூதனை தோட்டத்திற்கு அனுப்பினார் (லூக்கா 22:43). சிலுவையினிடத்திற்குத் தூதன் யாரும் அனுப்பப்படவில்லை.

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*

---

குறிப்பு

[1]கொல்கொதா (யோவான் 19:17ஐக் காணவும்) என்பது "மண்டை ஓடு" என்று அர்த்தப்படுகிற (கல்வாரியா-*calvaria* என்ற) லத்தீன் வார்த்தையிலிருந்து வந்த "கல்வாரி" என்றும் அழைக்கப்படுகிறது (லூக்கா 23:33).